
Tamil/தமிழ்

2019 ஃபெடரல் தேர்தலுக்கான

# உங்கள் உத்தியோகபூர்வ வழிகாட்டி

## மே 18 சனிக்கிழமை 2019



ஆஸ்திரேலியாவின் உருவாக்கத்திற்கு
உங்கள் வாக்கு உதவும்

**18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கும் வாக்களிப்பு கட்டாயமானது**

# தேர்தல் தினம் மே 18 சனிக்கிழமை 2019.

# வாக்களிப்பு நிலையங்கள் சரியாகக் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

## நான் எங்கே வாக்களிக்கலாம்?

தேர்தல் தினத்தன்று உங்கள் மாநிலம் அல்லது டெரிட்டரிப் பிராந்தியத்திலுள்ள எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும் நீங்கள் வாக்களிக்க முடியும்.

பொதுவாக உள்ளூர்ப் பாடசாலைகள், தேவாலயங்கள், மற்றும் சமூக மண்டபங்கள் அல்லது பொதுக் கட்டடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள வாக்களிப்பு நிலையத்தை அறியச் செல்க: **www.aec.gov.au/where**. வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய விபரங்கள் பெருநகரங்களிலுள்ள பிரதான செய்திப் பத்திரிகைகளிலும் தேர்தல் தினத்திற்கு முதல்நாள் வெளியிடப்படவும் செய்யும்.

வாக்களிப்பு நிலையங்களைச் சென்றடையும் வசதி நிலவரங்கள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களைப் பற்றிய விபரங்கள் ஆகியவற்றைப் பின்வரும் வலைத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்: **www.aec.gov.au/where**

பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடுடையோருக்கான வாக்களிப்புத் தெரிவுகள் பற்றி அறிய 13 23 26 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

தேர்தல் தினத்தன்று நீங்கள் வேறொரு மாநிலத்தில் இருப்பீர்களாயின் நிருணயிக்கப்பட்டுள்ள பிற மாநில வாக்களிப்பு நிலையமொன்றில் நீங்கள் வாக்களிக்கலாம் அல்லது முன்கூட்டிய வாக்களிப்பதற்கான பின்வரும் தெரிவுகளில் ஒன்றை மேற்கொள்க.

## தேர்தல் தினத்தன்று என்னால் வாக்களிக்க இயலாவிட்டால்?

தேர்தல் தினத்தன்று உங்கள் மாநிலத்தில் அல்லது டெரிட்டரிப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையமொன்றிற்கு உங்களால் போக முடியாவிட்டால், தேர்தலுக்கு முன்பாக நேரடியாகவோ தபால் மூலமோ வாக்களிக்க நீங்கள் தகுதி பெறக்கூடும்.

### தேர்தலுக்கு முன்பு எப்படி நேரடியாக வாக்களிப்பது?

தேர்தல் தினத்திற்கு முன்னதாக முன்கூட்டிய வாக்களிப்பு நிலையமொன்றில், நடமாடும் வாக்களிப்புக் குழுவொன்றில், அல்லது ஆஸ்திரேலிய கடல்கடந்த வாக்களிப்பு நிலையமொன்றில் நீங்கள் வாக்களிக்கலாம்..

முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள் **ஏப்ரல் 29 திங்கள்கிழமை 2019** முதல் திறந்திருக்கும். அவை திறந்திருக்கும் நேரங்களும் திகதிகளும் வேறுபட்டிருக்கும், எனவே முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய விபரங்களை அறியச் செல்க: **www.aec.gov.au/where**

தகுதி உட்பட மேலதிக விபரங்களை அறியச் செல்க: **www.aec.gov.au** அல்லது 13 23 26 எனும் இலக்கத்தினை அழைக்க.

### தேர்தலுக்கு முன்பு எப்படி தபால் மூலம் வாக்களிப்பது?

தகுதி பெறுவீர்களாயின் தபால் மூல வாக்களிப்புக்கு நீங்கள் **www.aec.gov.au/pva** என்ற வலைத்தளத்தில் இணையவழியில் விண்ணப்பிக்கலாம். எந்தவொரு ஆஸ்திரேலிய AEC காரியாலயத்திலும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும். **2019 மே 15 புதன்கிழமை மாலை 6 மணிக்கு** முன்பாக AEC வந்தடையக் கூடிய விதத்தில் உங்கள் விண்ணப்பத்தினை முடிந்தளவு விரைவில் அனுப்பவும்.

## எனது தேர்தல் தொகுதிப் பிரிவு மாறியுள்ளதா?

மொத்தம் 151 ஃபெடரல் தேர்தல் தொகுதிகள் உள்ளன (இரண்டு புதிய தொகுதிகள் உட்பட). கடந்த ஃபெடரல் தேர்தலில் இருந்ததை விட தற்போது சில தொகுதிகளுக்கு வேறு பெயரிடப்பட்டுள்ளன மற்றும் பல தொகுதிகளின் எல்லைகளும் மாற்றப்பட்டுள்ளன.

நீங்கள் வசிக்கும் பகுதி எந்தத் தேர்தல் தொகுதியில் உள்ளது என்பதை அறிய **www.aec.gov.au/electorate** என்ற வலைத்தளத்தைப் பாருங்கள்

## நீங்கள் யாருக்கு வாக்களிப்பதென்பது உங்கள் முடிவாகும்

வாக்களிப்பு நிலையங்களுக்கு வெளியில், வேட்பாளர்களின் பிரதிநிதிகள், நீங்கள் வாக்களிப்பதற்கான ஒரு குறிப்பிட்ட விதத்தில் வாக்களிப்பதற்கான ஆலோசனை கூறி எவ்வாறு வாக்களிப்பது என்ற விபரங்களைக் கொண்ட அட்டைகளைப் பெற விரும்புகிறீர்களா என உங்களைக் கேட்கக் கூடும். எவ்வாறு வாக்களிப்பதென்ற இவ்வட்டைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளவோ அல்லது பின்பற்றவோ அவசியமில்லை.

# உங்கள் வாக்கை எவ்வாறு கணக்கில் எடுக்கப்படச் செய்வது

தேர்தல் தினத்தன்று உங்களுக்கு **இரண்டு வாக்குச்** சீட்டுகள் தரப்படும்:

- பச்சை நிறத்திலானது பிரதிநிதிகள் சபைக்கானது மற்றும்
- வெள்ளை நிறத்திலானது ஸெனட்டிற்குரியது.

இரண்டு வாக்குச் சீட்டுகளையும் நீங்கள் கட்டாயம் நிரப்பவேண்டும்.

பச்சை நிற வாக்குச் சீட்டில் பிரதிநிதிகள் சபைக்கான உங்கள் உள்ளூர் அல்லது தொகுதிப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.


வெள்ளை நிற வாக்குச் சீட்டில் ஸெனட்டிற்கான உங்கள் மாநில அல்லது எல்லப் பிராந்தியப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.**

AEC யின் வலைத்தளத்தில் வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் பயிற்சி செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? **www.aec.gov.au/practise-voting** என்ற வலைத்தளத்திற்குச் செல்க.

## பிரதிநிதிகள் சபை

பச்சை நிற வாக்குச் சீட்டில் உங்கள் விருப்பு ஒழுங்கு வரிசைப்படி **ஒவ்வொரு பெட்டியிலும்** நீங்கள் கட்டாயம் இலக்கமிட வேண்டும்.




மாதிரி வாக்குச் சீட்டு

## ஸெனட்


வெள்ளை நிற வாக்குச் சீட்டில் வாக்களிப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

**ஏதாவது ஒன்றில்**

### கோட்டிற்கு மேலே

கோட்டிற்கு மேலே நீங்கள் வாக்களிக்கத் தீர்மானிப்பதாயின் நீங்கள் **குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிட** வேண்டும்.


உங்கள் முதல் தெரிவுக்குரிய கட்சியின் அல்லது குழுவியின் பெட்டியில் '1' என்றும் இரண்டாம் தெரிவுக்குரியதில் '2' என்றும் தொடர்ந்து குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிடவும். கோட்டிற்கு மேலே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.




**அல்லது**

### கோட்டிற்குக் கீழே

கோட்டிற்குக் கீழே நீங்கள் வாக்களிக்க விரும்புதாயின், **குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** 1 இலிருந்து 12 வரை உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் நீங்கள் இலக்கமிட வேண்டும். கோட்டிற்கு கீழே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.




மாதிரி வாக்குச் சீட்டு

**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.**

AEC யின் வலைத்தளத்தில் வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் பயிற்சி செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? **www.aec.gov.au/practise-voting** என்ற வலைத்தளத்திற்குச் செல்க.

## வாக்களிப்பு நிலையத்தில் என்ன நடக்கும்?

1. ஒரு வாக்களிப்பு அதிகாரி உங்கள் முழுப்பெயரையும் முகவரியையும், இந்தத் தேர்தலில் இதற்கு முன்பாக வாக்களித்தீர்களா என்றும் கேட்பார். வாக்குப் பதிவேட்டிலுள்ள உங்கள் பெயரில் கோடிடுவார்.



2. உங்களுக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும் - பச்சை நிறத்திலானது பிரதிநிதிகள் சபைக்கும், வெள்ளை நிறத்திலானது செனட்டிற்குமுரியது.



3. **இரண்டு வாக்குச் சீட்டிலுமுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.** உங்களுக்கு ஏதும் சந்தேகமிருப்பின் வாக்களிப்பு அதிகாரிகளிடம் உதவி கோரலாம்.



4. நீங்கள் வாக்களித்து முடித்த பிறகு உங்கள் வாக்குச் சீட்டுகளை மடித்து அவற்றைச் சரியான வாக்குப் பெட்டியில் இடவும்.

## இவ்வழிகாட்டியின் வேறு பதிப்பு வடிவங்கள்

இவ்வழிகாட்டியின் ஏனைய வடிவங்களான ஒலிநாடா மற்றும் பெரிய எழுத்திலான வெளியீடு போன்றவற்றை **www.aec.gov.au** என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். 13 23 26 என்ற இலக்கத்தினை அழைப்பதன் மூலம் பிரெய்ல் (கண்ணற்றோர் அச்சுமுறை) உம் கிடைக்கும்.

நீங்கள் செவிப்புலன் இல்லாதவராக இருந்தால் அல்லது செவிப்புலன் குறைபாடு அல்லது பேச்சுத் திறன் குறைபாடுடையவராகவோ இருந்தால் 'நேஷனல் ரிலேய் ஸேர்விஸ்' (National Relay Service) ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

- TTY (செவிமடுப்பு மற்றும் பேச்சுத் தடங்கல் உள்ளோர்) 13 36 77 -ஐ அழைத்து 13 23 26 என்று கூறவும்.
- 'பேசுங்கள் செவிமடுங்கள் (Speak and Listen) சேவை'யைப் பயன்படுத்துவோர் 1300 555 727 -ஐ அழைத்து 13 23 26 என்று கூறவும்.
- 'இணைய ரிலே'-யைப் (Internet relay) பயன்படுத்துவோர் NRS உடன் இணைப்பை ஏற்படுத்தி இலக்கம் 13 23 26 வேண்டுமெனக் கேட்கவும்.

### பிற மொழிகளில் உள்ள தகவல்கள்

இவ்வழிகாட்டியின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளை **www.aec.gov.au/translated** என்ற வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

### தொலைபேசி உரைபெயர்ப்புச் சேவைகள்

வாக்களிப்பு மற்றும் தேர்தல் பற்றிய தகவல்களைப் பெற தொலைபேசி உரைபெயர்ப்பு சேவைகள் உள்ளன. 1300 720 153 -ஐ அழைத்து உங்கள் மொழியில் பேச வேண்டுமெனக் கேட்கவும்.

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கும் வாக்களிப்பு கட்டாயமானது. நீங்கள் வாக்களிக்காவிட்டால் உங்கள் மீது வழக்குத் தொடரப்படலாம்.

**ஒரு முறைக்கு அதிகமாக வாக்களிப்பது சட்ட விரோதமான குற்றச் செயலாகும்.**

17_0919

**www.aec.gov.au** 13 23 26

AEC Australian Electoral Commission

Authorised by the Electoral Commissioner, Canberra.